Santha Kumar

PRIVATE AND CONFIDENTIAL
(for members only)

AMERICAN MISSION COLLEGE, UDUPPIDDY.

LIGHT DISPELS DARKNESS

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

1998-09-06 ஞாயிறு பி.ப 3.00 மணி
(புதிய நேரம்)

பேராசிரியர் அ. துரைராசா ஞாபகார்த்த
மண்டபத்தில் நடைபெறும்
வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் 09 வது
சமர்ப்பிக்கப்படவுள்ள

# ஆண்டறிக்கை

# 1997 - 1998

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

## 1997–98 ம் ஆண்டிற்கான

## பழைய மாணவர் சங்கம்

## கொழும்புக் கிளை

| | |
|---|---|
| தலைவர் :- | கலாநிதி R. மகாலிங்கசிவம் |
| உபதலைவர்கள் :- | திரு E. பஞ்சநாதன் |
| | திரு. K. நீலகண்டன் |
| | திரு. S. தில்லைநடராசா |
| செயலாளர் :- | திரு. K. மகாதேவா |
| உபசெயலாளர் :- | திரு. V. M. நடராசா |
| பொருளாளர் :- | திரு. K. மகாலிங்கம் |
| உபபொருளாளர் :- | திரு. M. கணபதிப்பிள்ளை |

நிர்வாகசபை அங்கத்தவர்கள் :-

திரு. V. மகாதேவன்
திரு. K. T. சிவகுருநாதன்
திரு. E. ஈஸ்வரலிங்கம்
திரு. D. K. ஜீவநாதன்
திரு. V. நவரட்ணம்
திரு. V. செல்வரத்தினம்
திரு. G. பரஞ்சோதி
திரு. K. சபாரட்ணம்
திரு. C. சிவரட்ணம்
திரு. A. தளையசிங்கம்
திரு. R. பொன்னம்பலம்
திரு. K. சிதம்பரப்பிள்ளை

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
# பத்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:- அ. மி. கல்லூரி பேராசிரியர் ஆ. துரைராசா ஞாபகார்த்த மண்டபம்

காலம்:- 06 09-1998 ஞாயிறு பி. ப. 3 மணி (புதிய நேரம்)

தலைவர்:- Dr. க. மு. தங்கராசா

## நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. தலைவர் உரை
3. அதிபர் உரை
4. 9 வது வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
5. பொருளாளர் வரவு செலவு அறிக்கை
6. 25 08-97 – 01-09-98 வரையான ஆண்டறிக்கை
7. பிரேரணைகள்
8. கனடாக்கிளை போஷகர் கருத்துரை
9. புதிய ஆண்டிற்கான செயற்குழு அங்கத்தவர் தெரிவு
10. புதிய ஆண்டிற்கான செயற்திட்டம்
11. வேறு விடயங்கள்
12. நன்றியுரை

உடு. அ. மி. கல்லூரி
ப. மா. சங்கம்
உடுப்பிட்டி.

செல்வி சி. வேலுப்பிள்ளை
செயலாளர்

# கல்லூரி முதல்வரின் அறிக்கை

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 1997/98ம் ஆண்டு பொதுக் கூட்டத்தில் கல்லூரி வளர்ச்சி நிலையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்,

பல்வேறு இடங்களில் இயங்கி வந்த கல்லூரியின் வகுப்பறைகள் மீண்டும் பழைய இடத்திற்கு ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன. கட்டிட, தளபாட வசதிகளற்ற வேளையிலும், தற்காலிகக் கொட்டகைகளின் கீழ் கல்லூரி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. 1083 மாணவர்களும். 41 நிரந்தர ஆசிரியர்களும் 2 தொண்டர் ஆசிரியர்களும் 3 பகுதிநேர ஆசிரியர்களும் கல்விப்பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர். இரு ஆய்வுகூட உதவியாளர், அமைய அடிப்படையிலான ஒரு எழுதுவினைஞரும் அலுவலர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

பாடசாலை என்பது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்குப் பயிற்சியளிக்கும் ஒரு பாசறை என்றே கொள்ள வேண்டும். சமூகத்தில் மனித நேயமுள்ள மனிதனை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஓரளவு திருப்திகரமாக அமைந்துள்ளன. க. பொ. த. சாதாரண பரீட்சையில் 50% க்கு மேற்பட்டோர் உயர்தர வகுப்பில் கல்விகற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். பாடரீதியாக சித்தியடைந்தோர் தொகை வருமாறு

| | | | |
|---|---|---|---|
| முதன்மொழி | — 65% | சைவசமயம் | — 78% |
| கணிதம் | — 54% | கிறிஸ்த்தவம் | — 100% |
| விஞ்ஞானம் | — 45% | சங்கீதம் | — 44% |
| சமூகக்கல்வி | — 56% | வரைதல் | — 38% |
| ஆங்கிலம் | — 07% | வானொளி | — 24% |
| வர்த்தகம் | — 73% | ஆங் - இலக்கியம் | — 100% |

உயர்தர பரீட்சையில் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதி பெற்றோர் 47 பேர்

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — 22 |
| கலை | — 13 |
| வர்த்தகம் | — 12 |

மிகச்சிறந்த பெறுபேறு:—

| | | |
|---|---|---|
| கணிதம் | — செல்வன் A. ஜெயரஞ்சன் | 303 |
| விஞ்ஞானம் | — செல்வி T. வேணுகா | 299 |
| கலை | — செல்வி T. கீதாஞ்சலி | 276 |

ஆண்டு ஐந்து புலமைப்பரிசிற் பரீட்சையில் தோற்றியோர் 55 பேரில் 08 பேர் சித்தியடைந்தனர்.

தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில் பங்குபற்றிய பத்துப் போட்டிகளில் ஒன்பது போட்டிகளில் பரிசுகள் கிடைத்தன. பரிசு பெற்றவர் விபரம் வருமாறு!

பிரிவு - ii. பாலோதல் - செல்வன் சி சுருதிலயன்
இசை தனி - செல்வன் அ. சுபிந்தன்
பிரிவு - iii. பாலோதல் - செல்வன் பா. பாலமுரளி
இசை தனி - செல்வன் இ சஞ்சீவ்
பிரிவு - iv. சிறுகதை - செல்வன் பு. ஈழநாதன்
இசை தனி - செல்வன் க கீர்த்திராசன்
பிரிவு - v. பேச்சு - செல்வன் செ. சுதர்சன்

சிறந்தபோட்டி - இசை குழு
இலக்கியநாடகம் - குழு நிகழ்ச்சி

கணித, விஞ்ஞானப் போட்டியில் கோட்டமட்டத்தில் பங்கு பற்றியவர்களில் பரிசுபெற்றவர்கள் விபரம் வருமாறு

1) செல்வன் கு. கணேசானந் 2) செல்வன் த சுவர்ணராஜ்
3) செல்வன் சி. ஹரிகரன் 4) செல்வன் அ. சுபிந்தன்
5) செல்வன் பு இளம்பரிதி 6) செல்வன் சி. தனஞ்செயன்
7) செல்வன் த. சுதர்சன் 8) செல்வன் இ. சஞ்சீவ்
9) செல்வன் சு. சுதாகரன் 10) செல்வன் கி. ரஜீன்

விளையாட்டுத்துறையில் மெய்வல்லுநர் போட்டியில் வலய மட்டத்தில் இருவர் தனிமனித சாதனையை (சாம்பியன்) நிகழ்த்தி உள்ளனர். வலய மட்டத்தில் 17 வயது, 19 வயது பிரிவுகளில் உதை பந்தாட்டத்தில் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றதோடு உபமாகாணப் போட்டியில் 19 வயது பிரிவில் முதலாம்இடமும் 17 வயது பிரிவில் இரண்டாவது இடமும் கிடைத்தன. 25 வருடங்களின் பின் நிகழ்ந்த சாதனை என்பது குறிப்பிடத்தக்கது. கோட்ட மட்டத்தில் கரப்பந் தாட்டத்தில் இருபிரிவினரும் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் கொண்ட எமது பழைய மாணவர் சங்கம் முழுவலிமையோடு இயங்கிவருவது குறிப் பிடத்தக்கது. திரும்பத் திரும்ப இலற்றை கூறுவது பொருத்தமற்றது என நினைக்கின்றேன். அவர்களது சேவையை ஊரே அறியும்.

சி. நடராசா
அதிபர்

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்: உடுப்பிட்டி அ. மி. கல்லூரி பேராசிரியர் அ. துரைராசா ஞாபகார்த்த மண்டபம்

காலம்: **24-08-97**

மேற்படி கூட்டம் மேற்குறிக்த இடத்திலும் நேரத்திலும் கலாநிதி சி. சிறீசற்குணராசா தலைமையில் மௌன அஞ்சலியுடன் ஆரம்பமானது.

தலைவர் தமது உரையை நிகழ்த்தினார். இக்கூட்டம் எமது ப. மா. சங்கம் தம்மால் செயற்படுத்தப்பட்டவற்றைச் சம்பிரதாய பூர்வமாக அத்தாட்சிப் படுத்துவதற்காகவே நடைமுறைப்படுத்தப் படுகிறது. அதிபரின் அறிக்கை செயலாளரின் ஆண்டறிக்கையால் சங்கத்தின் செயற்பாடு தெளிவாக விளங்கும் எமது ப மா. சங்கம் ஒரு பணக்காரச் சங்கம் எனப்பலரால் கருதப்படுகிறது எமது சங்கத் தினால் லட்சக்கணக்கில் பணம் செலவு செய்யப்படுகிறது. கணக்காய்வாளர் கணக்கறிக்கையை கணக்காய்வு செய்து வ. பொ. கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. எம்மால் நியமிக்கப் பட்ட ஆசிரியர்களின் வேதனம் ஏறக்குறைய 1½ லட்சம் ரூபா அள விலுள்ளது. முக்கியமாக நாம் கவனிப்பது ஆசிரியப்பற்றாக்குறை. அதனை நிவர்த்தி செய்ய கனடாக்கிளை உதவிபுரிகிறது. அவர் களின் ஈடுபாடு பாராட்டுக்குரியது. எமது நடவடிக்கை சிறிதுசிறி தாக விரிவடைந்து கணனி கற்பிப்பதற்கே வழிசெய்வதிலும் முனை கிறது. அவர்களை எமது ப. மா. சங்கச் சார்பில் நியமித்து எமது வளத்தை பெருக்குதலே எம் தலையாய கடமை. எமது முன்னாள் தலைவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் தொழில் நுட்பக் கல்வியின்வளம்விருத்தி செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்ததால் அழகியற்கலை நடைபெறுகிறது. பாடசாலை விட்டு விலகியோருக்கு எம்மாலான தொழிற் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு ஆவன செய்ய முன்வருவோம். எமது கனடாக் கிளைச் சங்கத்தின் ஆரம்ப அங்கத் தவரும் தொடர்ந்தும் எமது கல்லூரிக்காக அரும்பாடுபட்டு வரும் கலாநிதி த. வசந்தகுமார் அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். எமது சங்கம் கோரிக்கைக்காக ஒரு சதமும் செல

வழிப்பதில்லை. நிதி கையாளுவதில் நாம் மிக விழிப்பாக இருக்கிறோம். நிர்வாக சபை மட்டுமல்ல எமது பொதுச்சபையும் எமது நடவடிக்கைகளை உற்று நோக்கி ஆலோசனைகளைத் தந்துதவ மாறும் வேண்டுகிறோம். எமது சங்கம் மாதாமாதம் கடைசி ஞாயிறு கூடி ஆராய்ந்து ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுகிறது. எமது பேராசிரியரின் நினைவு தினத்தன்று கலாநிதி ந. ஞானகுமாரன் (யாழ் பல்கலைக் கழகம்) அவர்களால் வழங்கப்பட்ட உரை ஆங்கிலத்தில் வெளியிட இருந்தோம். முடியவில்லை. அதனை இன்று வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் எம் முன்னாள் அதிபர் அமரர் றொபேர்ட் நவரத்தினத்தின் நிழற்படத்திரைநீக்கம் நடைபெற இருந்தும் அப்படம் கொழும்பிலிருந்து கிடைக்காததால் அதனையும் ஆசிரிய தினத்தன்று செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இன்று செய்ய முடியாமைக்கு மன்னிப்பும் கோரினார்.

அதனைத் தொடர்ந்து அமரர் றொபேர்ட் நவரத்தினம் பற்றி திரு. எஸ். ஆர். அரியரத்தினம் அவர்கள் உரை நிகழ்த்தினார். பேர்னாட்ஷோ என்ற ஆங்கிலக் கவிஞர் கூறிய கூற்றை ஞாபகப்படுத்தினார். ''உலகம் ஒரு நாடக மேடை நாம் அதில் நடிகர்கள்'' எமது நடிப்பு உன்னதமானதாக இருக்க வேண்டும். அவ்வாறே றொபேர்ட் ஆசிரியர் அவர்கள் தன் முழுநேரத்தினையும் இக்கல்லூரியிற் செலவிட்டார். மு. ப. 8 மணி முதல் பி. ப. 8 மணிவரை கல்லூரியிலேயே செலவு செய்வார். சிறந்த விளையாட்டு வீரர். விளையாட்டுப் போட்டியில் அ. மி. கல்லூரி முதன் முதலாக விளையாட்டு வீரர்கள் பங்குபற்றி வெற்றியீட்டியது அவரது விடாமுயற்சியும் பயிற்சி கொடுத்தலுமே. கரப்பந்தாட்டத்திலும், கோல் ஊன்றிப் பாய்தலிலும் சிறந்த வீரர் அவரது காலத்தில் உருவாகினர். சிதம்பராக்கல்லூரியும் அ. மி. கல்லூரியும் கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றி விளையாடியதை எம் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். சாரணியம் அகில இலங்கை ரீதியிற் கொடிகட்டிப் பறந்ததும், அவரது காலத்திலேயே றொபேர்ட், ஜோன் ஆகியோர் இக்கல்லூரியின் வளர்ச்சியில் முன்னின்று உழைத்தவர்கள். அவர்களை இக்கல்லூரி என்றும் மறக்க முடியாது.

திரு. றொபேர்ட் மாஸ்டரின் மகன் திரு. ந. சத்தியமூர்த்தி அவர்கள் தமது தந்தை பற்றி அவரினது வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் அர்த்தமுள்ளவை என்ற கருத்தை முன்வைத்தார். தான் கெட்டிக்காரன் என்பதைக் கூறமாட்டார். மகாத்மாகாந்தியைப் பின்பற்றுவார் கே. ரீ. ஜோன் அவர்களை மதித்து நடந்தார். அவர்

பைபிள் வாசிப்பதில்லை. ஆனாலும் மலைப் பிரசங்கத்தைத் தான் விரும்பியது பற்றிக் கூறுவார். சீவியத்தில் கஷ்டப்படுதல் அவசியம் என்பதைக் காட்ட உதாரணமூலம் விளக்குவார். நேர்மையான முறையில் விளையாடி தோற்றாலும் பராவாயில்லை என்பார். அவருடைய கருத்தின்படி நீதிக்கும், சலுகைக்கும் முரண்பாடு பற்றிய கருத்தால் அவர் தோல்வியடைந்தார்; எனக்கூறியயதாகக் கூறினார். தான் தாழ்த்தப்பட்ட போது கடவுள் உதவி செய்தார் எனக் கூறுவார். நீதி கிழிந்த கந்தைபோல் உள்ளது எனக் கூறுவார். அவருக்கு இலவசமாக எக்கைங்கரியத்தையும் செய்வதில் விருப்பமற்றவர் எனக் கூறித்தன் உரையை நிறைவேற்றினார்.

தொடர்ந்து கடந்த வருடப் பொதுக்கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டு திரு த. முத்துசாமி அவர்கள் சரியெனப் பிரேரிக்க, திரு. ச. கிருஷ்ணசாமி ஆமோதிக்க சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

பொருளாளரால் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அது சரியென திரு. செ. யோகேஸ்வரன் பிரேரிக்க திரு. த இராசரத்தினம் ஆமோதிக்க சபை ஏகமனதாக அங்கீகரித்தது. ஆண்டறிக்கை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டது.

கனடாக்கிளைச் சங்க முக்கிய உறுப்பினரான கலாநிதி த. வசந்தகுமார் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றினார். யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி அ மி கல்லூரி என்றால் தெரியாது இருக்கலாம். ஆனால் கனடாவில் உடுப்பிட்டி அ மி. கல்லூரியைத் தெரியாதவர்களில்லை. 1989 இல் தான் இங்கிருந்து கனடா சென்று ஆரம்பிக்கப்பட்ட கனடாக்கிளை இன்றுவரை தொடர்ந்து இயங்குகிறது. தான் தலைவராகவும் முக்கிய செயற்பாட்டு உறுப்பினராகவும் தொடர்ந்து இருந்து செயற்படுவதாகத் தெரியப்படுத்தினார். தாம் இப்போது கணிசமான தொகை சேர்ந்திருப்பதாகவும், தான் அதன் பொறுப்பாளன் எனவும் கூறினார். தம்மிடம் 17,000 $ இல் உள்ளது, அதனை வங்கியில் அனுப்புவதற்கு உதவியாக ஹற்றன் நஷனல் வங்கியில் கணக்கை ஆரம்பித்தால் தமக்கு நிதிப்பரிமாற்றல் இலகுவாகும் எனக் கூறினார். தாம் சேர்த்து அனுப்பும் பணம் சிறந்த முறையில் கல்வியை மேம்படுத்துவதற்காக கல்லூரியின் வளர்ச்சிக்காக சரியான முறையில் செலவு செய்வது பற்றித் தலைவரின் தலைமையுரையில் இருந்து அறிந்து பெருமகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். தலைவரின் பேச்சு தாம் உத்தேசித்த கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் கிடைத்திருப்பதால் தான் இனிக் கேட்டு அறிய வேண்டியதில்லை எனக் கூறினார். செயலாளரின் தன்னல

மற்ற சேவையைப் பாராட்டிப் பேசினார். கனடாவில் 300 க்கும் மேற்பட்ட அ. மி. கல்லூரி பழைய மாணவர்கள் இருந்தும் ஏறக் குறைய 10 மாணவர்களே முக்கிய பங்கு எடுக்கிறார்கள். நாம் - 20° குளிரில் கஷ்டப்படுகிறோம். நாம் அங்கு வேலை செய்வது எப்படியெனில் முன்பு இலங்கையில் இந்தியத் தொழிலாளர்கள் எப்படி வேலை செய்தார்களோ அதனை ஒத்தது.

அங்கு உடுப்பிட்டி அ. மி. கல்லூரி தான் முதன் முதல் ப. மா. சங்கம் கிளை ஆரம்பித்து சேமிப்பை முழுவதுமாக தாய்ச் சங்கத்துக்கு அனுப்புவது. மற்றைய கல்லூரிப் ப. மா. சங்கக் கிளை களுக்கும் எமது கிளைக்கும் வேறுபாடு உண்டு தமது சங்கத்தில் கட்டுப்பாடுகள் உண்டு, பேச்சுப் போட்டியில் பங்குபற்றும் அனை வருக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிட்போம். அங்கு சனிக்கிழமை களில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. அங்குள்ள பல்கலைக்கழக அனு மதிக்கு தமிழில் விசேட சித்தி கணக்கிலெடுக்கப்படுகிறது 9-12 வகுப்புகளில் தமிழ் மொழி அரசாங்கத்தால் கற்பிக்கப்படுகிறது. மணித்தியாலத்திற்கு 30 $ஈன தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரிய ருக்கு வழங்கப்படுகிறது. அவர் தனக்கு இப்படியான வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமூகமளித்துத் தன் கருத்துக்களைத் தெரிவிப் பதற்குச் சங்க நடவடிக்கைகளை அறிவதற்கும் சந்தர்ப்பம் கிடைத் தமைக்குப் பெருமகிழ்ச்சியுடன் தன் நன்றியையும் தெரிவித்து தம் உரையை நிறைவேற்றினார்.

அதனைத் தொடர்ந்து இவ்வருடத்துக்கான செயற்குழு உறுப் பினர்கள் தெரிவு திரு. ச. தில்லையம்பலம் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. அவர் தமது உரையில் உறுப்பினர்கள் தொண்டு செய்யும் மனப்பான்மை உள்ளவர்களாகவும் ப. மா. சங்க வேலை செய்ய நேரம் ஒதுக்கி செயற்படக் கூடிய ஆற்றல் உள்ளவர்களைத் தெரிவு செய்யும் படிகோரி சபையில் முதன் முதலாக செயலாள ரைத் தெரிவு செய்யும்படி வேண்டினார்.

செயலாளர் செல்வி சி. வேலுப்பிள்ளை பிரேரித்தவர் திரு. த. முத்து சாமி ஆமோதித்தவர் திரு. த. இராசரத்தினம

தலைவர் திரு. மு. தங்கராசா பிரேரித்தவர் திரு, செ. யோகேஸ்வரன் ஆமோதித்தவர் திரு. கலாநிதி சி. சிறிசற்குணராஜா

உபதலைவர்கள் 1) திரு. தி. யோகசாமி பிரேரித்தவர் திரு. ச கிருஷ் ணசாமி ஆமோதித்தவர் திரு. ச. தங்கவேல்
2) திரு. ச. கிருஷ்ணசாமி பிரேரித்தவர் திரு. செ. தவராசா ஆமோ தித்தவர் திரு. செ. சூரியகுமார்

உபசெயலாளர்: கலாநிதி சி. சிறீசற்குணராஜா பிரேரித்தவர் திரு. த. முத்துசாமி ஆமோதித்தவர் திரு.ச. கிருஷ்ணசாமி

பொருளாளர்: திரு. ந. நல்லநாதன் பிரேரித்தவர் திரு. கொ. குணசிங்கம் ஆமோதித்தவர் திரு. பொ. வியாகேசு

அங்கத்தவர்கள்: திரு. த. இராசரத்தினம், திரு. பொ. வியாகேசு திரு. செ. கவராசா, திருமதி இ. மகாரட்ணம், திரு. . த. அருள்தாஸ் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

கணக்காய்வாளர்: திரு. த. அபூர்வசிங்கம் பிரேரித்தவர் திரு. கலாநிதி சி. சிறீசற்குணராசா ஆமோதித்தவர் திரு. தி. யோகசாமி

அங்கத்தவர் தெரிவைத் தொடர்ந்து வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

01. ஒவ்வொரு அங்கத்தவரும் தலா ஒரு அங்கத்தவரையேனும் ப. மா. ச. அங்கத்தவராக சேர்த்து உதவ வேண்டும் என்ற கோரிக்கை திரு. தி.யோகசாமி அவர்களால் முன்வைக்கப்பட்டது.

02. கம்பர்மலைப்பகுதியிலிருந்தும் நிர்வாக அங்கத்தவரை இடம்பெற வேண்டும் என்றகோரிக்கை முன் வைக்கப்பட்டது. தெரிவு முடிந்தபின் செய்ய முடியாது, என்பதால் அவர்கள் வரும் காலங்களில் நடைமுறைப்படுத்துவதாக தலைவர் கூறினார். மற்றும் தொழில் நுட்பப்பயிற்சியை ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். நிர்வாக சபையில் யோசித்து முடிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டது

03. மாணவர்களின் குடிநீர்ப்பிரச்சனையை கவனிக்குமாறு திரு. பொ. வியாகேசு கேட்டுக் கொண்டார்.

04. ஜேர்மன் குழுவால் கட்டிடம் கட்டப்படும்போது ப. மா. ச. பா. அபிவிருத்தி சபை தேவையான உதவிகளைச் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் பி. ப. 1.30 மணியளவில் இனிதே நிறைவேறியது.

1997 - 1998 ஆண்டு
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.
பழைய மாணவர் சங்கம்.

செல்வி சீ. வேலுப்பிள்ளை
செயலாளர்

# உடுப்பிட்டி அ. மி. கல்லூரி பழைய மாணவர் சங்கம்
# ஒன்பதாவது ஆண்டறிக்கை 97/98

*1997-07-01—1998-08-31* வரை

எமது பழைய மாணவர் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கையை தங்கள்முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது கல்லூரியில் ஜுன் 1997ல் அதிபராகப் பதவியேற்று சிறப்புற நிர்வாகம், கற்றல், கற்பித்தல் நடாத்திவரும் திரு. இ. நடராசா அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில் பெரு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கவேண்டியது எமது சங்கத்தின் கடமையாகும். எமது சங்கத்தின் பழைய மாணவராக இல்லாதிருந்தும், எமது ஊரவராக இருப்பதால் ஊர்ப்பற்றுடனும், பாடசாலைப் பற்றுடனும் அதிபர் செயற்படுவது நன்கு அறியக்கூடியதாக இருப்பதை யாரும் மறுக்கமுடியாது. அவர்களது செயற்பாட்டால் எமது கல்லூரி முன்னேறிப் பழைய நிலையை வெகுவிரைவில் அடைய வாய்ப்பு அமையும் எனப் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

1. அங்கத்தவர்:-

இக்கால கட்டத்தில் எமது அங்கத்தவர்களின் எண்ணிக்கை 206 ஆக அதிகரித்துள்ளது. அங்கத்துவ பணம் இலங்கை வங்கியிலுள்ள சேமிப்புக்கணக்கில் தனித்துவமாக வைப்பிலிடப்பட்டு வந்தது எமது கொழும்புக் கிளையினர் ரூபா 9000/-ஐ அக்கணக்கிலக்கத்திற்கு அனுப்பியதால் அங்கத்துவ பணத்துடன் சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அப்பணம் விரைவில் மீளப்பெற்று வேறு சேமிப்பில் இட உள்ளோம்.

எமது முன்னாள் ஆசிரியரும், அதிபரும், பழையமாணவர் சங்க உறுப்பினராக இருந்த திரு. இரத்தினம் சிங்கரத்தினம் அவர்கள் காலமானதையிட்டு. எமது சங்கம் மலர்வளைய அஞ்சலி செலுத்தியும், கல்லூரி ஒருநேரப் பாடசாலையாகவும், சகல மாணவர்களும் ஆசிரியர்களும், ஊழியர்களும் அன்னாருக்கு அஞ்சலி செலுத்திக் கௌரவித்தனர். இக்கால எல்லையில் எமது கல்லூரியில் பலவருடங்களாக ஆரம்பக்கல்வி பயிற்றுவித்த ஆசிரியை திருமதி நேசமணி இராசரத்தினம் அவர்களும், சமயம், தமிழ்மொழி, இலக்கியம் கற்பித்ததோடு, பாடசாலையின்புறக்கிராமங்களில் ஒரு மைல்கல்லாக சேவையாற்றிய பண்டிதர் திரு. சி. வேலுப்பிள்ளை அவர்களும் காலமாகியுள்ளனர் என்பதையும் அறியத்தருகிறேன்.

2. நிர்வாக சபைக் கூட்டங்கள்:-

எமது கடந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் 8ம் மாதத்தில் நடந்ததால் புதிய நிர்வாக சபையின் கீழ் 12 கூட்டங்கள் கூட்டப் பட்டன.

நிர்வாக சபைக் கூட்டவரவு:

| | | |
|---|---|---|
| Dr. மு. தங்கராசா | 12 | 02 |
| திரு: தி. யோகசாமி | 12 | 10 |
| ,, ச. கிருஷ்ணசாமி | 12 | 09 |
| ,, ந. நல்லநாதன் | 12 | 04 |
| செல்வி சி. வேலுப்பிள்ளை | 12 | 12 |
| கலாநிதி சி. சிறிசற்குணராசா | 01 | 01 |
| கலாநிதி அ. நவரத்தினராசா | 05 | 04 |
| ,, பொ. வியாகேசு | 12 | 10 |
| ,, த. இராசரத்தினம் | 12 | 11 |
| ,, செ. தவராசா | 12 | 06 |
| ,, சி. அருள்தாஸ் | 09 | 02 |
| திருமதி இ. மகாரட்ணம் | 12 | 06 |
| திரு. ப. பிரேம்சிவபக்தன் | 03 | 03 |

கலாநிதி சி. சிறிசற்குணராசா அவர்கள் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்றதால் அவரது இடத்திற்கு கலாநிதி அ. நவரட்ண ராசா அவர்கள் 98ம் ஆண்டு மாசி மாதத்தில் எம்முடன் இணைக் கப்பட்டார்கள். திரு. சி. அருள்தாஸ் அவர்கள் ஒழுங்காக கூட்டங் களுக்கு சமூகந் கொடுக்காத காரணத்தால் திரு. ப. பிரேம்சிவபக்தன் அவர்களையும் எம்முடன் இணைத்துக் கொண்டோம்.

3. கிளைச்சங்கங்கள்:-

கனடா கிளைச்சங்கம் எமது கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், பக்கபலமாகவும் செயற்படுவதனை குறிப்பிடா மல் விடமுடியாது. கல்லூரியின் புற நிகழ்ச்சிகள் பலவற்றிற்கும் நிதி உதவி வழங்குவது எமது கனடாக் கிளையினரே 1989ம் ஆண்டு எமது தாய்ச் சங்கம் ஆரம்பிக்கப்பட அடுத்த ஆண்டில் ஆரம்பித்து 1998ம் ஆகஸ்ட் மாதம் 1, 2, 3, ந் தேதிகளில் தனது 10 வது வானவில் விழா நிகழ்ச்சிகளை சிறப்பாக நடாத்த இருப்பதாக கலா நிதி த வசந்தகுமார் அவர்கள் தொலைபேசியில் அறிவித்திருப்பது பேருவகை அளிக்கின்றது.

கனடாக்கிளையால் இதுவரை எமது பழைய மாணவர் சங்கத் திற்குக் கிடைத்தநிதி ரூபா 25,72,210 ஆகும் இதில் உடுப்பிட்டி மகளிர்

கல்லூரியின் ப. மா. சங்கத்திற்குக் கொடுத்த நிதி ரூபா 5,22,560/- ஆகும் (30-07-98 வரை) இந்நிதி கனடாக் கிளையினரின் அறிவுறுத்தலுக்கிணங்க வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடப்பொதுக் கூட்டத்தில் கலாநிதி த. வசந்தகுமார் அவர்களும் சமுகந் கொடுத்திருந்தார்கள். இங்குள்ள கஷ்டங்களை நேரில்கண்டறிந்தார்கள். ஆந்த ஆண்டின் எமது இரட்டை மாடிக்கட்டிட வேலையை ஜேர்மன் நிறுவனமான GTZ குழுவினர் மொத்தச் செலவின் 20% னை 17% மாக குறைத்து அச்செலவினை எமது பா. அ. சங்கம் (SDS) அல்லது வேறேதும் வகையில் பொறுப்பேற்க வேண்டும் எனக்கோரினர். இப்பாரிய பொறுப்பு மிகவும் கஷ்டமானது என்பதனை உணர்ந்த அதிபரவர்கள் கனடாக் கிளையினருடன் தொடர்பு கொண்டு தெளிவாக விளக்கியதன் பலனாக 15 000 $ டொலர் அனுப்பப்பட்டுள்ளது. அதில் ரூபா 1,60 000/-ஐ உடுப்பிட்டி மகளிரின் ப. மா. சங்கத்தினருக்கு கொடுத்துதவும்படியும் அறிவுறுத்தினார்கள் அதிற்கிணங்க 26/7/98 ல் காசோலை மூலம் U.G.S ன் O.G.A க்கு வழங்கப்பட்டுள்து. மிகுதிப் பணத்தினை கட்டிட நிதிக்கு அதிபர் அவர்களுக்கு வழங்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது அதிபரவர்கள் கேட்கும் நேரத்தில் பணம் வங்கியிலிருந்து எடுத்து வழங்கப்படும்.

1. கனடாக்கிளையினர் அனுப்பும் நிதியே எமது கல்லூரியின் ஆசிரியர் பற்றாக்குறைக்காக, தற்காலிகமாக நியமிக்கப்படுவோருக்கு வழங்கப்படுகிறது.

2. a) பரிசுகள் பேராசிரியர் அ. துரைராசா நினைவுப்பரிசு ரூபா 5000/- (யாழ்மாவட்டத்தில் மிகக்கூடிய புள்ளி கணித/விஞ்ஞானத்துறை க. பொ. த உயர்தரம்)

   b) க. பொ த உ/த பரீட்சையில் தகுதிநிலை 150 க்குள் பெற்றவர்கள்

   c) சகல துறைகளிலும் சிறந்தவர் (All rounder A/L) ரூபா 1000/-

   d) வகுப்புக்களில் சிறந்த பெறுபேறு பாடரீதியாக பெறும் மாணவர்கள்

   e) க. பொ. த. சா/த சிறந்த பெறுபேறு

3. உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், உடற்பயிற்சி போன்ற போட்டிகளில் பங்கு கொள்ளும் மாணவர்களின் போக்குவரத்துச் செலவுகள்

4. கட்டிடத்தின் மேலதிக செலவுகள்:-

எமது கல்லூரியின் பல தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தயங்காது ஒத்துழைப்பு வழங்கி வரும் எமது பழைய மாணவர் சங்கக் கிளையினரின் செயற்பாடுகளை நாம் பாராட்டாமல் விடமுடியாது.

கொழும்புக்கிளை:-

காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவர்களின் ஆக்க பூர்வ முயற்சியால் நிதி சேகரித்து எம் கல்லூரியின் தேவைகளை நிறைவேற்ற பல வகைகளிலும் தம்மால் முடிந்தவரை உதவுகின்றனர்.

1) பேராசிரியர் அ. துரைராசா ஞாபகார்த்த பரிசு (எமது கல்லூரியின் சிறந்த பெறுபேறு A/L கணிதம் / விஞ்ஞானம் / உயிரியல்) ரூபா 3000/-

2) திரு. K. T. ஜோன் (முன்னாள் அதிபர்) ஞாபகார்த்தப் பரிசு (எமது கல்லூரியின் சிறந்த பெறுபேறு A/L கலை / வர்த்தகம்) ரூபா 3000/-

3) வசதி குறைந்த மாணவர்களை கற்க ஊக்குவிக்கும் பொருட்டு ஒருவருடம் ரூபா 25,000/- தருவதாகவும், இத் தவணை ரூபா 5000/- அனுப்பப்பட்டுள்ளது.

4) நூலகருக்கு சில மாதங்கள் ரூபா 1000/- வீதம் வேதனமளித்தமை. நூலகத் தளபாடங்கட்கு ரூபா 12,000/- வழங்கியமை

5) கட்டிட நிதிக்கு ரூபா 50,000/- உதவியமை

கல்வி:-

ஆசிரியர் பற்றாக் குறைக்கு எம்மால் நியமிக்கப்பட்டோரில் பலர் 1998 ன் ஆரம்பத்தில் கல்வித்திணைக்களம் ஆசிரியர் நியமனங்கள் செய்ததால், அவர்களது சேவையை நிறுத்தியுள்ளோம்.

7-98 ல் எமது சங்கத்தால் வேதனம் வழங்கப்படும் ஆசிரியர்கள் வர்த்தகப்பட்டதாரி - 01 1500/-, விஞ்ஞானம் - A/L (01) 1000/- ஆரம்பப்பிரிவு (01) - 750/-, தட்டச்சு (01) - 750/-

எமது க. பொ. த உ/த பரீட்சை 1997 August, சா/த பரீட்சை டிசம்பர் 1997, புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பாராட்டுக்குரியன.

புலமைப்பரிசில் ஆண்டு 5 ல் 8 பேர் க. பொ. த. (சா/த) 7D 2C

| | கணிதம் | விஞ் | கலை | வர்த் |
|---|---|---|---|---|
| க.பொ த உ/த பழைய பா. திட் | 2ABC | 3AB | 2B2C | 2A2C |
| ,, புதிய பா. திட் | 3AB | --- | A3B | 2A2C |

## விளையாட்டுத்துறை:-

மெய்வல்லுநர் போட்டியின் பிரதம விருந்தினராக எம் பழைய மாணவரும் பருத்தித்துறைக் கோட்டப் பிரதிக்கல்விபணிப் பாளருமாகிய திரு. வே. இ. செல்வரத்தினம் அவர்களும் சிறப்பு விருந்தினராக GTZ நிறுவனத்தின் பிரதம பணிப்பாளருமாகிய திரு. புருனோ BRUNER அவர்களும் அழைக்கப்பட்டு எம்கல்லூரியினால் கௌரவிக்கப்பட்டார்கள்.

கோட்ட, மாவட்ட மட்டங்களில் உதைபந்து, கரபந்து, மெய் வல்லுநர் போட்டிகளில் வெற்றியீட்டி வடகிழ் மாகாணபோட்டிகளில் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்டும், சூழ்நிலை காரணமாக திருமலை சென்று பங்கு கொள்ள எமது குழுக்களுக்கு முடியவில்லை.

உதைபந்து 17 வயதின் கீழ் முதலாம் இடம்
உதைபந்து 19 வயதின் கீழ் இரண்டாம் இடம்
கரபந்து 19 வயதின் கீழ் மூன்றாம் இடம்
மெய்வல்லுநர் போட்டியில் செல்வன் அ. துஷ்யந்தன்

## பரிசளிப்பு விழா:-

எமது கல்லூரியில் 6-10-97 ல் இடம் பெற்றது அதில் கல்விப்பணிப்பாளர், திரு. சி. சிவராசா அவர்கள் வலயம் 02 பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள்.

சிரேஷ்ட பிரிவு சகல துறையிலும் சிறந்தவருக்கு ரூபா 750/- வழங்கப்பட்டது இது எமது முன்னாள் ஆசிரியராக கடமையாற்றிய அமரர் திரு. மு. அருளானந்தம் அவர்களின் ஞாபகார்த்த பரிசாகும்.

கனிஷ்ட பிரிவு சகல துறையிலும் சிறந்தவருக்கு ரூபா 500/- வழங்கப்பட்டது. இது எமது முன்னாள் உடற்பயிற்சி ஆசிரியர் அமரர் திரு. விக்ரர் ஜெயராஜாவின் ஞாபகார்த்தப் பரிசாகும்

ஏனைய பரிசுகள் வருடந்தோறும் கனடாக் கிளையின் நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

## ஆசிரியர் தினம்:-

வருடா வருடம் 6/10 ல் சிறப்பாக நடத்தப்படுகிறது. இவ் வருடம் பண்டிதர் க. மூத்துவேல் அவர்களின் தலைமையில் நடந் தேறியது. அத்தருணம் மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம் பெற் றிருந்தன. அத்தோடு எமது முன்னாள் ஆசிரியரும் அதிபருமான திரு. றொபேர்ட் நவரத்தினம் அவர்களின் நிழற்படமும் திரை நீக் கம் செய்து வைக்கப்பட்டது.

பேராசிரியரின் 4 வது நினைவு தினம் 11-06-98 அன்று எமது சங்க உபதலைவர் திரு. தி. யோகசாமி அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. அத்தருணம் யாழ்பல்கலைகழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களால் ''பழந்தமிழர் வாழ்வியலில் நிலம்'' என்ற தலைப்பில் நினைவுப்பேருரை வழங்கப்பட்டது. இவ்வுரை சிறு புத்தக வடிவிலும் வெளியிடப்பட்டது. எம் முன்னாள் அதிபர திரு. ந. அனந்தராஜ் அவர்கள் எதிர் பாராத விதமாக வருகை தந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்கள். அத்தோடு பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ், திரு. பொ. விக்னேஸ்வரன் (பொறியியலாளர்) எமது அதிபர் திரு. கி. நடராசா ஆகியோரும் கலந்து நினைவுப் பேருரை வழங்கிச் சிறப்பித்தார்கள். அன்றைய தினம் பேராசிரியரின் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

1. யாழ் மாவட்டத்தில் கணிதத்துறையில் அதிஉயர் பெறுபேறு செல்வன் செல்வரதன் உதயசங்கர் ரூபா 5000/-
2. எமது கல்லூரியில் கணித/விஞ். துறை அதிஉயர்புள்ளி செல்வன் அப்புத்துரை ஜெயரஞ்சன் ரூபா 3000/-
3. எமது கல்லூரியின் கலை/வர்த்தகத்துறை அதிஉயர் புள்ளி செல்வி கிதாஞ்சலி தெய்வேந்திரம் ரூபா 3000/- (திரு. K. T. ஜோன் நினைவுப்பரிசு)
4. எமது கல்லூரியின் கணித / விஞ். துறை (புதியபாடத்திட்டம்) அதிஉயர் புள்ளி செல்வன் அரியநாயகம் தயாபரன்
5. கல்வியில் ஆர்வமுள்ள கஷ்டப்பட்ட மாணவர் 11 பேருக்கு ரூபா 8000/- (கொழும்புக் கிளையினர்) Pass புத்தக மூலம்.
6. எமது கல்லூரியில் தகுதி நிலை 150 குட்பட்ட மாணவர் 12 பேருக்கு ரூபா 6000/-

## நுண்கலைப்பிரிவு:-

எம்மால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நுண்கலைப் பிரிவின ரின் நாட்டிய கலைவிழா அரங்கேற்றம் 06-02-98 ல் நுண்கலைப் பிரிவுத் தலைவர் திரு. தி. யோகசாமி அவர்களின் தலைமையில் நடந்தேறியது. பிரதம விருந்தினராக கரவெட்டிக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. S. செல்வராசா அவர்கள் கலந்து சிறப்பித் தார்கள்.

## பொது:-

1) கனடாக் கிளையினர் பணம் அனுப்புவதற்குச் சுலபமாக ஹற்றன் நாசனல் வங்கியில் க/கு இல 17709 திறக்கப்பட்டது.

2) நூலகரின் சேவை திருப்தியில்லாத காரணத்தால் தற்காலிக மாக இடை நிறுத்தப்பட்டுள்ளது

3) GTZ கட்டிடம் அமைக்கும் இடத்தில் இருந்த கட்டிடத்தை அகற்றி திரும்ப போடுவதற்கு ரூபா 15,000/- எமது சங்கநிதி யால் வழங்கப்பட்டது.

4) கணணி கிடைத்தும் அது உபயோகப்படுத்த முடியாத நிலையிலி ருப்பது வேதனைக்குரியது.

5) கட்டிட நிதியாக ரூபா 85,000/- கடனாக அதிபர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6) கனடாக் கிளையின் நிதி கிடைக்க காலதாமத மேற்பட்டதால் நிரந்தர வைப்பிலிடப்பட்ட பணம் வட்டியுடன் மீளப்பெற்று வேதனம் வழங்கப்பட்டது. க/கு இல
FD/PQ/124/14/INS/41/15/INS/89

7) நுண்கலை மன்றத்தின் கலைவிழா செலவாக எமது நிதியிலி ருந்து ரூபா 7202/25 வழங்கப்பட்டுள்ளது.

8) கனடாக்கிளையினரின் நிதி ரூபா 6,51,000/- கிடைத்தது. அதில் ரூபா 1,60,000 - உடுப்பிட்டி மகளிரின் ப. மா. சங்கத் திற்கு வழங்கப்பட்டது.

9) ஆரம்ப பிரிவு ஆசிரியை செல்வி ம. சியாமளா, தட்டச்சாளர் செல்வி பா. மதிவதனி ஆகியோர் 10-97 லிருந்து வேறு வேலைக்குச் செல்வதால் இடை நிறுத்தப்பட்டனர், திரு. கு. மனோகரன் செல்விக. அற்புதமலர் ஆகியஆசிரியர்களின் சேவையும் 31-12-97 உடன் நிறுத்தப்பட்டுள்ளது.

10) GTZ னர் மேற்கொண்டுள்ள இருமாடி (12 அறை) கட்டிடம் செப்ரம்பர் 98 க்குள் முடிவுற உள்ளது. அதன் பணியாளர் வேதனம் 17% (9 லட்சம்வரை) கனடாக்கிளையினர் பொறுப் பேற்க முன்வந்துள்ளனர்.

11. கட்டிட நிதி சேகரிப்பதற்காக கலைவிழா 14-06-98ல் எம் உபதலைவர் திரு. இ. யோகசாமி அவர்கள் தலைமையில் நடந்தேறியது. சிறப்பு விருந்தினர்களாக யாழ் வளாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், பருத்தித்துறைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. V. T. செல்வரத்தினம், எம் முன்னாள் அதிபரும், இந்நாள் வடகீழ் மாகாணக் கல்வியமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. ந. அனந்தராஜ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

அத்தருணம் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவ மாணவியர்களின் ''காலம் தந்த கோலமகள்'' என்னும் இசைநாட்டிய நாடகம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது போற்றுதற்குரியது. அதன் சகல பொறுப்புக்களையும், அதிபர் அவர்களே பொறுப்பேற்று நடாத்தினார்கள். அதன்மூலம் ரூபா 1, 45, 000/- செலவு போக மிகுதி இலாபமாக கிடைத்துள்ளது. அத்தோடு திருமலை கொழும்பு, லண்டன் போன்ற இடங்கட்கு அனுப்பிய ரிக்கற்றுகளுக்குரிய பணம் இதுவரை எம் கைக்குக் கிடைக்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மொத்தச்செலவு ரூபா 45, 692/- ஆகும் இந்நிதி சேகரிப்பிற்கு பாராட்டிற்குரிய முறையில் எமது ஆசிரியர்கள், மாணவர்கள், எமது சங்க உறுப்பினர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

காணி:-

எமது விளையாட்டுத்திடல், சண்முக வளவு ஒரு நியம விளையாட்டுத்திடலாக அமையாததால், வலய/கோட்ட விளையாட்டுக்கள் இடம் பெறுவதில்லை இக்குறைபாட்டை நீக்கு முகமாக சூழலிலுள்ள காணிகளை விலைக்கோ அல்லது நன்கொடையாகவோ பெற்று விஸ்தரிக்க வேண்டும் என அதிபரவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேற்புறக் காணியை திரு. க. ஜீவானந்திடம் விலைக்கு வாங்குவதெனவும், வடக்கில் திரு. சுந்தரலிங்கம் தரும் 6 யார் காணிக்குப் பதிலாக மேற்குப்புறத்தில் வழங்குவதெனவும், தென்மேற்குப் புறத்தில் திரு. க. நீலகண்டன், திருமதி வி. மீனலோஜினி, திரு. க. உமாபதி, திரு. க. மணிவண்ணன் ஆகியோரின் காணியைத் தேவைக்கேற்ப வாங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெற்குப் புறமாக கிழக்கு மூலையில் கோவிற்காணி இருப்பதாலும் திரு பொ. வியாகேசு I யார் காணி மாத்திரம் தரச் சம்மதித்ததாலும், தெற்குப்புற விஸ்த்தரிப்பு தற்காலிகமாக நிறுத்துப்பட்டு, வடமேற்குப் புறத்தால் ஓரளவு விஸ்த்தரிப்பை தற்போதைக்கு

மேற்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அக்காணியில் எம் உப தலைவர்களில் ஒருவரான திரு. ச. கிருஷ்ணசாமி (நில அளவையாளர்) அவர்கள் கட்டை அடித்துத் தந்துள்ளார்கள். ஒவ்வொருவரிடமிருந்து வாங்கவேண்டிய காணியின் நிலப்பரப்பு மாற்றீடு செய்யும் காணியின் பரப்பு, தற்போதுள்ள விளையாட்டுத்திடல், விஸ்தரிப்பின் பின் திடலின் பருமட்டான வரைபடம் வரைந்து தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## முடிவுரை:

எமது பழைய மாணவர் சங்கம் இயன்ற ஒத்துழைப்பினை கல்லூரியின் கற்றல், கற்பித்தலை ஊக்குவிப்பதற்கு மிகவும் மகிழ்ச்யுடன் செயற்பட்டு வருகின்றது. எச்சந்தர்ப்பத்திலும் கல்லூரியின் நிர்வாக விடயங்களில் (Administration) இடையூறாகச் செயற்படாது, என்பதையும், கல்லூரியின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு. அதிபர், ஆசிரியர், மாணவர்களின் வேண்டுகோள்களை, எமது நிர்வாக / பொதுச்சபையால் ஆலசி ஆராயப்பட்டு தேவையெனக் கருதினால் ஒத்துழைப்பை நல்குவதற்கு பின் நிற்கமாட்டாது

1987 ற்குப் பின் மர நிழல்களிலும், அயலார் வீடுகளிலும் கற்றல் கற்பித்தல்கள் நிகழ்ந்தன. 10 வருடங்களின் பின் பழையநிலைபோல கற்க வசதியளித்தமைக்காக ஜெர்மன் நிறுவனமாகிய GTZ க்கு நம் சமூகம் கடமைப்பட்டுள்ளது. கொழும்பு, கனடாவிலுள்ள எம் பழைய மாணவர்களின் செயற்பாட்டை உணர்ந்து ஏனைய நாடுகளிலுள்ள எம பழைய மாணவர்களும் உதவி ஒத்தாசைகள் புரிந்தால் எம் கல்லூரியை இலகுவில் கட்டி எழுப்ப முடியும். தத்தம் நாடுகளில் கிளைகள் அமைத்து தம்மை ஆளாக்கிய கல்வி மாதாவை, முன்னேற்ற வழி வகுப்பார்களாக.

வணக்கம்

# UDUPPIDDY A. M. COLLEGE
# PAST PUPILS' ASSOCIATION

| | |
|---|---|
| President:- | Dr. M. Thangarajah |
| Vice Presidents:- | Mr. T. Yogasamy<br>Mr. S. Krishnasamy |
| Secretary:- | Miss. S. Veluppillai |
| Asst. Secretary:- | Dr. A. Navaratnarajah |
| Treasurer:- | Mr. K. N. Nallanathan |
| Committee Members:- | |
| | Mr. T. Rajaratnam |
| | Mr. P. Viyagesu |
| | Mr. S. Thavarajah |
| | Mr. P. Premsivapakthan |
| | Mrs. R. Maharatnam |
| Auditer:- | Mr. T. Aboorvasingam |
| Patron:- | Mr. K. Nadarajah (Principal) |

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

## 1997ம் ஆண்டு ஜுலை மாதம் 01ம் திகதி தொடக்கம் 1998ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் திகதி வரைக்குமான

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு விபரம்

| கொள்ளல் | ரூ ச | கொடுப்பனவுகள் | ரூ ச |
|---|---|---|---|
| 01-07-97 இல் மீதிப்பணம் காசு 4528.25 | | மேலதிக ஆசிரியர் உதவித் தொகை | 96,500 00 |
| வங்கி 9454 85 | 13,983 10 | N.A. & I.T.A இன் பயிற்சி செலவுப்படி | 1,350 00 |
| N.A & I.T.A இனால் வழங்கப்பட்டது | 1,350 00 | நூலகர் வேதனம் | 7,000 00 |
| N S B இல் சே. க/இ 1037 இலிருந்து | | அதிபருக்கான உதவிகள் | |
| எடுக்கப்பட்டது | 1,78,000 00 | நன்கொடைப் பணம் 44,411 00 | |
| N S B இல் நிலையான வைப்பு க/கு | | கடன் 1,00 000.00 | 1,44,411 00 |
| FD/PQ/12/14/INS/41 | | வருடாந்தக் கூட்டச் செலவுகள் | 8,892 00 |
| ஐ மீள் எடுத்தல் முதல் 1,62,450 00 | | ஆசிரியர் தினச் செலவுகள் | 2,865 00 |
| எடுக்கும் பொழுது வட்டி 28,570 72 | 1,91020 72 | பேராசிரியர் நினைவஞ்சலிக் கூட்டச்செலவுகள் | 40,509 00 |
| அதிபர் கடன் மீளளித்தல் | 15,000 00 | 97/98 கால அங்கத்துவப் பணம் | |
| அங்கத்துவப் பணமாக (97/98) இல் | | வைப்பிலிட்டது | 600 00 |
| பெறப்பட்டது | 600 00 | 96/97 கால அங்கத்துவப் பணம் | |
| P P A, கொழும்புக் கிளையினால் | | வைப்பிலிட்டது | 100 00 |
| வழங்கப்பட்டது | 23,000 00 | காகிதாதிகள் | 326 00 |
| P P A, கனடாக் கிளையினால் | | சங்க கூட்டங்களின் தேநீர் செலவுகள் | 130 00 |

| | | | |
|---|---|---|---|
| வழங்கப்பட்டது | 2,59,539 00 | குழு கூட்டங்களின் உதவியாளர் உதவித்தொகை | 1,000 00 |
| செயலாளரிடமிருந்து கடனாக பெற்றது | 12,000 00 | பரிசளிப்பு விழாச் செலவுகள் | 19,566 00 |
| திரு. விக்ரர் ஜெயராஜாவின் ஞாபகார்த்தப் பணம் | 5,000 00 | உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவியர் சங்கத்திற்கு வழங்கப்பட்டது | 1, 60, 000 00 |
| | | நுண்கலை மன்ற கலைவிழாச் செலவுகள் | 7,202 25 |
| | | மறைந்த ஆசிரியர்களின் கண்ணீர் அஞ்சலிக்கான செலவுகள் | 1,260 00 |
| | | செயலாளர், கனடாக் கிளையுடன் தொலைபேசியில் உரையாடல் செலவு | 500 00 |
| | | ஆசிரியரின் புத்தக வெளியீட்டிற்கான அன்பளிப்பு | 500 00 |
| | | செயலாளரிடம் பெற்ற கடன் மீளளித்தல் | 12,000 00 |
| | | FNBL இல் கணக்கு ஆரம்பம் 500 00<br>வைப்பிலிட்டது 9 539 00 | 10,039.00 |
| | | P/C PP சே. க/கு 19054 இல் வைப்பிலிட்டது | 9,000 00 |
| | | NSB சே. க/கு 1037 இல் நிலையான வைப்பிலிருந்து எடுத்த பணத்தை வைப்பிலிட்டது | 1,16,020 72 |
| | | B/C காசோலைப் புத்தகங்கள் | 200 00 |
| | | 01-07-98 இல் மீதிப்பணம் காசு 14,613 25<br>வங்கி 44,917 60 | 59,530 85 |
| மொத்தப் பணம் | 6,99,492 82 | மொத்தப் பணம் | 6,99,492 82 |

# வங்கிகளின் நிலையான வைப்புக்கள், சேமிப்பு கணக்குகள் பற்றிய விபரம்

அ) இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு இலக்கம் 19054 | ரூ ச |
| 01-07 97 இல் இருப்பு | 31,659 01 |
| 13-08-97 இல் கொழும்புக்கிளையினால் அனுப்பப்பட்டபணம் | 9,000 00 |
| 01-10-97 இல் வட்டி | 3,052 86 |
| 30-06-98 இல் அங்கத்துவப்பணம் வைப்பு | 700 00 |
| 30-06-98 இல் கையிருப்பு | 44,411 87 |

ஆ) நிலையான வைப்பு க/இ 592943
(ஆரம்பத் தொகை ரூ 1,25,000 00)

| | |
|---|---|
| 01-07-97 இல் பெறுமதி | 1,88,402 33 |
| 12-11-97 இல் வட்டி | 26,376 33 |
| 30-06-98 இல் பெறுமதி | 2.14,6778 66 |

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி (HNBL)

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு இலக்கம் 17709 | |
| 4-9-97 கணக்கு ஆரம்பம் | 500 00 |
| 8-12-97 இல் வட்டி | 7 00 |
| 17-12-97 இல் கனடாக் கிளையினால் அனுப்பப்பட்டது | 2,59,539 00 |
| 19-01-98 மீள் எடுத்தது | 2,50,0 0 00 |
| இதன் படி 30-6-98 இல் மீதிப் பெறுமதி | 10,046 00 |

தேசிய சேமிப்பு வங்கி (NSB) பருத்தித்துறைக்கிளை

அ) நிலையான வைப்பு க/இ FD/PQ/12/14/INS/87
புதிய க/இ AI INS/12/38

| | |
|---|---|
| முதல் | 1,85,846 00 |
| வட்டி | 27 876 00 |
| புதிய முதல் | 2,13 722 00 |

ஆ) நிலையான வைப்பு க/இல FD/P /12/14/INS/95
புதிய க/இ INS/12/40

| | |
|---|---|
| முதல் | 2,08,176 10 |
| வட்டி | 31,225 50 |
| புதிய முதல் | 2,39,401 60 |

இ) நிலையான வைப்பு க/இ FD/PQ/14/INS/98
புதிய க.இ 9/INS/34

| | |
|---|---|
| முதல் | 45,622 50 |
| வட்டி | 6,843 00 |
| புதிய முதல் | 52,465 50 |

| | |
|---|---|
| ஈ) நிலையான வைப்பு க. இ FD/PQ/12M/14/INS/05 | ரூ ச |
| புதிய க.இ 14/INS/05 | |
| முதல் | 5000 00 |
| வட்டி | 700 00 |
| புதிய முதல் | 5,700 00 |
| உ) சேமிப்பு கணக்கு க. இ 1037 | |
| 01 07-97 இல் இருப்பு | 1,43 675 02 |
| 24-07-97 இல் மீள் எடுத்தது | 75,000 00 |
| 08-09-97 இல் மீள் எடுத்தது | 60,000 00 |
| 09-10-97 இல் மீள் எடுத்தது | 8000 00 |
| 04-12-97 இல் நிலையான வைப்பிலிருந்து எடுத்து வைப்பிலிடல் | 1,16,020 72 |
| 29-12-97 இல் மீள் எடுத்தது | 35,000 00 |
| 31-12-97 இல் வட்டி | 3,054 04 |
| 30-06-98 இல் மீதி இருப்பு | 84,749 78 |

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் 01-07-97 ம் திகதி தொடக்கம் 30-06-98 ம் திகதி வரைக்குமான மேற்படி வரவு செலவுக் கணக்குகள் சரியானதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகிறேன்.

K. N நல்லநாதன்
பொருளாளர்

மேற்குறிப்பிட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் 01-07-97 ம் திகதி தொடக்கம் 30-06-98 ம் திகதி வரைக்குமான வரவு - செலவுக் கணக்குகளை பரிசீலனை செய்து தேவையான பற்றுச் சீட்டுக்களையும் வரவு செலவுக்களையும் பதிவேட்டுக் கணக்குகளுடன் ஒத்துக்கிறது என உறுதிப்படுத்துகின்றேன்.

த. அபூர்வசிங்கம்
கௌரவ கணக்காய்வாளர்

மேற்குறிப்பிட்ட பழைய மாணவர் சங்க கணக்குகள் நிர்வாகக் குழுவினால் 26-07-98 ம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

# J Uduppiddy American Mission College

## G. C. E. A/L 97 August Old Syllabus

| | Phy | Chem | Bot | Zoo | Pu M | Ap M | Eco | Geo | Agr Sc | Log Sc | Com | Fi A/c | Hi Civ | Hs m | Ta | E/p | Mus |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 01 | 01 | 03 | 01 | 04 | 02 | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| B | 08 | 04 | — | 02 | 04 | 04 | 03 | 03 | — | 02 | 01 | — | — | — | 01 | — | — |
| C | 07 | 07 | 01 | — | 04 | 07 | 08 | 02 | — | 05 | 05 | 01 | 02 | 01 | 06 | — | 01 |
| S | 04 | 05 | — | 01 | 05 | 03 | 04 | 02 | 01 | 03 | 01 | 03 | 06 | 03 | 02 | 01 | — |
| F | 04 | 07 | — | — | 03 | 04 | 06 | — | — | 03 | 03 | — | 03 | 01 | — | — | 01 |
| Pass | 20 | 17 | 04 | 04 | 17 | 16 | 15 | 07 | 01 | 10 | 07 | 04 | 08 | 04 | 09 | 01 | 01 |
| Appeared | 24 | 24 | 04 | 04 | 20 | 20 | 21 | 07 | 01 | 13 | 10 | 04 | 11 | 05 | 09 | 01 | 02 |
| Applied | 28 | 28 | 04 | 04 | 24 | 24 | 24 | 09 | 01 | 15 | 10 | 05 | 12 | 06 | 11 | 01 | 02 |
| Pass % | 83.4 | 78.4 | 100 | 100 | 85 | 80 | 71.4 | 100 | 100 | 76.9 | 70 | 100 | 72.72 | 80 | 100 | 100 | 50 |

## G C E A/L 97 August New Syllabus

| | Phy | Chem | Bot | Zoo | Pu M | Ap M | Econ | Geo | Lo Sc | A/C | Hi Civ | Hi sm | Ta | Bu Sy. | Bu St. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 01 | 01 | — | — | 01 | — | — | — | — | — | 01 | — | — | — | — |
| B | — | — | — | — | — | 01 | 04 | 01 | 04 | 02 | 01 | — | 01 | — | |
| C | 02 | 01 | — | — | 01 | 02 | 05 | 02 | 5 | 03 | 01 | 02 | 0 | 03 | 05 |
| S | 04 | 06 | 02 | 01 | 05 | 02 | 07 | 01 | 04 | — | 06 | 02 | 02 | 6 | 02 |
| F | 02 | 01 | — | 01 | — | 02 | 07 | — | 01 | 03 | 01 | — | 02 | 04 | 02 |
| Pass | 07 | 08 | 02 | 01 | 07 | 05 | 16 | 04 | 13 | 05 | 09 | 04 | 04 | 09 | 07 |
| Appeared | 09 | 09 | 02 | 02 | 07 | 07 | 23 | 04 | 14 | 08 | 10 | 04 | 06 | 13 | 09 |
| Applied | 09 | 09 | 02 | 02 | 07 | 07 | 27 | 05 | 17 | 08 | 11 | 04 | 08 | 15 | 10 |
| Pass % | 77.78 | 88.89 | 100 | 50 | 100 | 71.50 | 69.6 | 100 | 92.9 | 62.5 | 90 | 100 | 66.7 | 69.2 | 77.7 |

## உடுப்பிட்டி அ. மி, கல்லூரி பழைய
## 01-07-1997 தொடக்கம்
## வரவு செலவு

### வரவு விபரம்

| மாதம் | பாட்டு ரூ. | நடனம் ரூ. | மொத்த வரவு |
|---|---|---|---|
| யூலை 1997 | 700 | 1400 | 2100 |
| ஆக்ஸ்ட் 97 | 700 | 1100 | 1800 |
| செப்டெம்பர் 97 | 550 | 550 | 1100 |
| அக்டோபர் 97 | 500 | 300 | 800 |
| நவம்பர் 97 | 400 | 1650 | 2050 |
| டிசம்பர் 97 | 250 | 1850 | 2100 |
| ஜனவரி 1998 | 500 | 900 | 1400 |
| பெபரவரி 98 | 350 | 1700 | 2050 |
| மார்ச் 98 | 300 | 2050 | 2350 |
| ஏப்ரல் 98 | — | 750 | 750 |
| மே 98 | 450 | 3500 | 3950 |
| யூன் 98 | 500 | 1100 | 1600 |
| மொத்தம் | 5200 | 16,850 | 22,050 |

### வரவு

| | |
|---|---|
| பாட்டு பயிலும் மாணவர் நிதி வரவு | 5200 00 |
| நடனம் பயிலும் மாணவர் நிதி வரவு | 16850 00 |
| மொத்த வரவு | 22050 00 |
| கடன் | 1525 00 |
| | 23575 00 |
| கடந்த வருடம் கடன் | 1905 50 |
| இவ்வருடம் கடன் | 1525 00 |
| கடன் மொத்தம் | 3430 50 |

# மாணவர் சங்கம் நடாத்தும் நுண்கலைப் பிரிவு
## 30-06-1998 வரையான
## விபரம்

### செலவு விபரம்

| மாதம் | நடன ஆசி. | பாட்டு ஆசி. | உதவி. | காகி. | மொத் |
|---|---|---|---|---|---|
| யூலை 1997 | 800 | 800 | 500 | | 2100 |
| ஆகஸ்ட் 97 | 800 | — | 500 | | 1300 |
| செப்டெம்பர் 97 | 800 | 800 | 500 | | 2100 |
| அக்டோபர் 97 | 800 | — | 500 | | 1300 |
| நவம்பர் 97 | 800 | 800 | 500 | | 2100 |
| டிசம்பர் 97 | 800 | 800 | 500 | | 2100 |
| ஜனவரி 98 | 800 | 800 | 500 | | 2100 |
| பெப்ரவரி 98 | — | — | 500 | | 500 |
| மார்ச் 98 | 1250 | 800 | 500 | | 2550 |
| ஏப்ரல் 98 | 2000 | 800 | 500 | 325 | 3625 |
| மே 98 | 1000 | — | 500 | | 1500 |
| யூன் 98 | 1000 | 800 | 500 | | 2300 |
| மொத்தம் | 10850 | 6400 | 6000 | 5325 | 23575 |

### செலவு

| | | |
|---|---|---|
| வேதனம் | பாட்டு ஆசிரியர் | 640 |
| ,, | நடன ஆசிரியர் | 1 850 |
| ,, | உதவியாளர் | 6000 |
| ,, | காகிதாதி | 325 |
| மொத்த செலவு | | 23575 |

சீ. வேலுப்பிள்ளை
பொருளாளர்
நுண்கலைப்பிரிவு

உடுப்பிட்டி அ. மி. கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 1-7-98 — 30-6-98 வரைக்குமான வரவு செலவுக் கணக்குகளைப் பரிசீலனை செய்து தேவையான பற்றுச் சீட்டுக்களையும் வரவு செலவு கணக்குப் பதிவேட்டுக் கணக்குகளுடன் ஒத்து இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

த. அபூர்வசிங்கம்
5 - 8 - 98

J/ Uduppiddy American Missin College

# Analysis of G. C. E O/L 1997

| | Reli | N.R.C | R. C | Eng | Sc. | Ma. | So St. | Mu. | Art. | Wo Wor. | Radio | Co | Eng. Li | Ta |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | 22 | - | 01 | 01 | 04 | 13 | 06 | 02 | 03 | — | — | 04 | — | 06 |
| C | 35 | 03 | — | 01 | 12 | 09 | 23 | 10 | — | 13 | 04 | 15 | 01 | 32 |
| S | 05 | — | — | 03 | 24 | 15 | 18 | 12 | 08 | 01 | 02 | 13 | — | 19 |
| F | 17 | — | 01 | 83 | 50 | 49 | 37 | 30 | 18 | 01 | 20 | 12 | — | 26 |
| Pass | 62 | 03 | 01 | 05 | 40 | 37 | 47 | 24 | 11 | 14 | 06 | 32 | 01 | 57 |
| Appeared | 79 | 03 | 02 | 88 | 90 | 86 | 84 | 54 | 29 | 15 | 26 | 44 | 01 | 123 |
| Applied | 85 | 03 | 02 | 97 | 95 | 93 | 90 | 60 | 31 | 15 | 28 | 48 | 01 | 129 |
| Ratio | 78.48 | 100 | 50 | 5.68 | 44.44 | 43 02 | 55.95 | 44.44 | 37.93 | 93.33 | 23.07 | 72.72 | 100 | 46.34 |

7 D 2C = 01
7 D 1 S = 01
5 D 3 C = 01
4 D 3 C = 03
3 D 4 C = 02

2 D 5 C = 01
2 D 4 C = 02
2 D 3 C 2 S = 02
2 D 2 C 2 S = 01

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## 1998–99 ம் ஆண்டிற்கான
# பழைய மாணவர் சங்கம்
## கனடாக் கிளை

தலைவர்:- திரு. V. சொர்ணலிங்கம

உபதலைவர்கள்:- திரு. S. பாலேந்திரன்
திரு. M. S. பேரின்பநாயகம்

செயலாளர்:- திரு. R. பிரபாகர்

உபசெயலாளர்:- திரு. N. கமலநாதன்

பொருளாளர்:- திரு. M பாஸ்கரநாதன்

உபபொருளாளர்:- திரு. A. முகுந்தன்

நிர்வாக உறுப்பினர்:-

திரு. P. நவநாதன்
திரு. N. ராமச்சந்திரன்
திரு. S. சிவயோகராஜா
திரு. V. தர்மகுலராஜா
திரு. S. அமலகுமார்
திரு. S. N. செல்வராஜா
திரு. P. இளந்துரை

கணக்காய்வாளர்:- திரு. S. M. மகாலிங்கம்

**அறங்காவலர் சபை:**

திருவாளர்கள்:- V. புவனச்சந்திரன்
V. சொர்ணலிங்கம்
கலாநிதி T. வசந்தகுமார்

காப்பாளர்:- கலாநிதி T. வசந்தகுமார்

கணாதிபன் அச்சகம் - மூத்தவிநாயகர் கோவிலடி - கரணவாய்